ஸ்ரீரங்கம் கோயிலில் சொர்க்கவாசல் திறப்பு

பரமபதவாசலை கடந்து சென்ற நம்பெருமாள்

திருச்சி, டிச. 31: ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலில் வைகுண்ட ஏகாதசி விழாவையொட்டி சொர்க்கவாசல் திறப்பு நேற்று அதிகாலை நடந்தது. 'கோவிந்தா, கோவிந்தா'.. 'ரங்கா, ரங்கா'.. என்ற பக்தி கோஷத்துடன் பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

பூலோக வைகுண்டம் என போற்றப்படுவதும், 108 வைணவ தலங்களில் முதன்மையானதுமான திருச்சி ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலில் வைகுண்ட ஏகாதசி விழா கடந்த 19ம் தேதி திருநெடுந்தாண்டகத்துடன் தொடங்கியது. மறுநாள் பகல்பத்து எனப்படும் திருவாய்மொழி திருநாள் தொடங்கியது. பகல் பத்து 10ம் திருநாளான நேற்று முன்தினம் நாச்சியார் திருக்கோலம் எனப்படும் மோகினி அலங்காரத்தில் நம்பெருமாள் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

இதன் தொடர்ச்சியாக ராப்பத்து திருவாய்மொழி திருநாள் நேற்று (30ம்தேதி) முதல் தொடங்கியது. ராப் பத்து முதல் நாள் முக்கிய நிகழ்ச்சியான சொர்க்க வாசல் திறப்பு நடைபெறும். அதன்படி நேற்று அதிகாலை 4.30 மணிக்கு மூலஸ்தானத்தில் இருந்து ரத்தின அங்கி, பாண்டியன் கொண்டை, கிளி மாலை உள்பட பல்வேறு சிறப்பு திருவாபரணங்கள் அணிந்து நம்பெருமாள் தனுர் லக்னத்தில் புறப்பட்டு வெளியில் வந்தார். 2ம் பிரகாரம் வலம் வந்து நாழிகேட்டான் வாசல் வழியே 3ம் பிரகாரத்திற்கு வந்த நம்பெருமாள், துரைப் பிரதட்சணம் வழியாக பரமபதவாசல் பகுதிக்கு வருகை தந்தார். அதிகாலை 5.45 மணியளவில் பரமபதவாசல் திறக்கப்பட்டது. நம்பெருமாள் ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ பரமபதவாசலை கடந்து சென்றார். அப்போது 'கோவிந்தா கோவிந்தா' ... 'ரங்கா ரங்கா'.. என கோஷம் விண்ணதிர பக்தி பரவசத்துடன் பக்தர்கள் சொர்க்கவாசலை கடந்தனர்.

பின்னர் நம்பெருமாள் மணல்வெளி, நடைப்பந்தல், தவுட்டரவாசல் வழியாக ஆயிரங்கால் மண்டபத்தின் எதிரில் உள்ள திருக்கொட்டகைக்கு வந்தார். அங்கு பெருமாள் 1 மணி நேரம் பக்தர்களுக்கு சேவை சாதித்தார். அதன் பின் சாதாரா மரியாதையாகி (பட்டு வஸ்திரம் சாற்றுதல்) ஆயிரங்கால் மண்டபத்தில் உள்ள திருமாமணி மண்டபத்தில் எழுந்தருளினார்.

விழாவில் அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, மாநகர போலீஸ் கமிஷனர் காமினி உள்பட ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சொர்க்கவாசலை கடந்து வந்து மூலவரை தரிசனம் செய்தனர். ஆயிரங்கால் மண்டபத்தில் நள்ளிரவு வரை நம்பெருமாள் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். பின்னர் நள்ளிரவு 12 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு, வீணை வாத்தியத்துடன் அதிகாலை 1.15 மணியளவில் மூலஸ்தானம் சென்றடைந்தார்.

நம்பெருமாளை தரிசிக்கவும், சொர்க்கவாசலை கடக்கவும் ஏராளமான பக்தர்கள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதலே கோயிலில் குவிந்தனர். நேற்றும் பகலில் கூட்டம் அதிகரித்தது. இவர்கள் ஆயிரங்கால் மண்டபம் முன்பு மணல் வெளியில் இரவு படுத்திருந்தனர். பக்தர்கள் விடிய, விடிய பரமபதம் விளையாடி, பஜனை பாடல்களை பாடினர். அதிகாலை கொட்டும் பனியையும் பொருட்படுத்தாமல் சொர்க்கவாசலை கடந்து தரிசனம் செய்தனர்.

'கோவிந்தா... ரங்கா' கோஷத்துடன் பக்தர்கள் தரிசனம்

▶ ஸ்ரீரங்கம் கோயிலில் சொர்க்க வாசல் திறந்ததும் நம்பெருமாளை தரிசிக்க வடக்கு கோபுர வாசல் பகுதியில் நீண்ட வரிசையில் காத்திருந்த பக்தர்கள் கூட்டம்.

இந்தாண்டில் 2 முறை சொர்க்கவாசல் திறப்பு

ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலில் கடந்த ஆண்டு வைகுண்ட ஏகாதசி விழா 2024 டிசம்பர் 30ம் தேதி துவங்கியது. விழாவின் முக்கிய நிகழ்ச்சியான சொர்க்கவாசல் திறப்பு 10-1-25ல் நடந்தது. இந்தாண்டு கடந்த 19ம் தேதி வைகுண்ட ஏகாதசி விழா துவங்கியது. நேற்று சொர்க்கவாசல் திறக்கப்பட்டது. அதாவது இந்தாண்டில் 2 முறை சொர்க்கவாசல் திறக்கப்பட்டுள்ளது. நேற்று அதிகாலை திறக்கப்பட்ட சொர்க்கவாசல் தொடர்ந்து 9 நாட்கள் திறந்திருக்கும். இந்த நாட்களில் மூலவர் முத்தங்கி அலங்காரத்தில் காட்சி தருவார். ஜனவரி 9ம் தேதி நம்மாழ்வார் மோட்சத்துடன் வைகுண்ட ஏகாதசி விழா நிறைவடைகிறது.

கோவை மாவட்டம் சிறுமுகையில்

தமிழ்நாட்டின் முதல் வனவிலங்கு சிகிச்சை மையம்

கோவை, டிச.31: கோவை மாவட்டம் சிறுமுகை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வனவிலங்குகள் சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையத்தை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்.

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளை ஒட்டி கோவை வனக்கோட்டம் 694 சதுர கி.மீ பரப்பளவில் அமைந்துள்ளது. கோவை வனக்கோட்டத்தில் மதுக்கரை, போளுவாம்பட்டி, கோவை, பெரியநாய்க்கன் பாளையம், காரமடை, மேட்டுப்பாளையம், சிறுமுகை ஆகிய 7 வனச்சரகங்கள் உள்ளன. இந்த பகுதிகளில் காட்டு யானை, புலி, சிறுத்தை, மான், காட்டு மாடு உள்ளிட்ட ஏராளமான வனவிலங்குகள் உள்ளன. வனவிலங்குகளுக்கு காயம் ஏற்பட்டாலோ அல்லது நோய்வாய்ப்பாட்டாலோ வண்டலூர் மற்றும் மைசூர் ஆகிய பகுதிகளுக்கு மட்டுமே கொண்டு சென்று சிகிச்சை அளிக்க முடியும்.

இதனால் ஏற்படும் சிக்கல்களை தவிர்க்கும் வகையில் தமிழ்நாட்டின் முதல் வனவிலங்கு மீட்பு, சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையம் கோவை மாவட்டம் சிறுமுகை அருகே பெத்திக்குட்டை பகுதியில் 20 ஹெக்டர் பரப்பளவில் ரூ.19.50 கோடி செலவில் அதி நவீன வசதிகளுடன் பிரம்மாண்டமாக உருவாக்கப்பட்டுள்ளது.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்

வனவிலங்குகள், பறவைகள், உயிரினங்கள் ஆகியவற்றுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் தனித்தனியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விலங்குகளுக்கு சிகிச்சை அளிக்க மொத்தம் 16 கூண்டுகளும், யானைகளுக்கு கரோல் எனப்படும் மரத்தினால் செய்யப்பட்ட தனி கூண்டுகளும், குட்டி யானைக்கு தனி கரோலும் அமைக்கப்பட்டுள்ளன. எந்தப் பகுதியில் வனவிலங்குகளுக்கு காயம் அல்லது உடல் நலக்குறைவு ஏற்பட்டாலும், இங்கு கொண்டு வந்து சிகிச்சை அளிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

வனவிலங்குகளுக்கு அறுவை சிகிச்சைகள் செய்ய வசதியாக அறுவை சிகிச்சை மையம் உள்ளிட்ட அதிநவீன வசதிகளும், வன ஊழியர்கள் தங்குமிடம், கண்காணிப்பு கோபுரம் போன்ற வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

இந்த மையம் கட்டுமான பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், கோவை வடகோவை பகுதியில் உள்ள வனக்கல்லூரி வளாகத்தில் நடந்த விழாவில் இதனை காணொலி வாயிலாக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்.

மேலும், தமிழ்நாடு வனப்படை நவீனமாக்குதல் மற்றும் ஆயுதங்கள் வழங்கும் நிகழ்ச்சி, வன உயிரினம் இடமாற்றம் சிகிச்சை மையம் திறப்பு விழா, சாடிவயல் யானைகள் முகாம் திறப்பு விழா, தமிழ்நாடு வனத்துறை மின்னணு ஆவண காப்பகம் துவக்க விழாவும் அங்கு நடந்தது.

இதில், வனத்துறையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்களை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டார்.

NATIONAL HEALTH SYSTEMS RESOURCE CENTRE
Technical Support Institution with National Health Mission
Ministry of Health & Family Welfare, Government of India

National Health Systems Resource Centre (NHSRC), New Delhi is seeking applications from eligible candidates for the following position:

- Advisor- Community Processes/ Comprehensive Primary Healthcare, NHSRC

The Terms of Reference (TOR) and other details of the position are available on the websites **www.nhsrcindia.org**, **www.mohfw.gov.in** and www.devnetjobsindia.org. Application must reach by **20th January 2026** in the prescribed online application format only (as mentioned in the websites).

Sd/- Principal Administrative Officer, NHSRC

தெற்கு இரயில்வே

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

முதுநிலை கோட்ட இயந்திரவியல் பொறியாளர், தெற்கு இரயில்வே, சேலம் – 636005 அவர்கள், பின்வரும் பணிக்காக மின்னணு ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார்.

வ. எண்.	விவரம்.	தகவல்
1	ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் மற்றும் தேதி	GEM / 2025 / B / 7045337 தேதி 26.12.2025
2	பணி பற்றிய விவரம்	ஈரோடு இரயில்வே காலனி மற்றும் கோட்ட அலுவலகத்தில் குப்பை கூளங்களை அகற்றித் தீர்த்தல் பணி உள்ளிட்டதாக, இரண்டு ஆண்டுகள் காலத்திற்கு காலத்திற்கு உரிய (ஞாயிற்றுக் கிழமைகள் தவிர்த்து) வெளிப்பாடு (outcome) அடிப்படையிலான முழுமையான தூய்மையாக்கல் ஒப்பந்தம்
3	மதிப்பீட்டு பெறுமானம்	₹2,54,29,637/-
4	பிணை வைப்பு தொகை	₹2,77,200/-
5	ஒப்பந்தப்புள்ளி மூடப்படும் தேதியும் நேரமும்	16.01.2026 அன்று 14:00 மணி
6	இணையதள முகவரி	http://www.gem.gov.in

GeM வலைதளத்தில் பதிவு பெற்றுள்ள நிறுவனங்களுக்கு மட்டுமே இதில் பங்கேற்க தகுதி உண்டு. ஒப்பப்புள்ளி சமர்ப்பித்தல் பற்றிய விவரங்களுக்கு பார்வையிடுங்கள் இணையதளம் www.gem.gov.in

பணியின் தன்மை, ஒப்பந்தப்புள்ளியின் தோராய மதிப்பு, அமைவிடம் மற்றும் பிற ஆவணங்கள் ஆகியவை குறித்து அறிய பார்வையிடுங்கள் இணையதளம் www.gem.gov.in

குறிப்பு: இதன் பின்னர், ஏதேனும் மாற்றங்கள் அல்லது மாறுபாடு தொடர்பாக திருத்தம் ஏதேனும் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளதா என்று பார்த்து வர வேண்டியது ஒப்பந்தப்புள்ளியாளர்கள் பொறுப்பு ஆகும். அவர்கள் தங்கள் ஒப்பந்தப்புள்ளியை பதிவேற்றம் செய்யும் தருணத்தில் அவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும் விவரங்களுக்கு காண்க இணையதளம் www.gem.gov.in

இடம்: சேலம் — முதுநிலை கோட்ட இயந்திரவியல் பொறியாளர்
தேதி: 26.12.2025 — தெற்கு இரயில்வே, சேலம் – 636005

ADITYA BIRLA CAPITAL — PROTECTING INVESTING FINANCING ADVISING

ஆதித்யா பிர்லா ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: இந்தியன் ரேயான் காம்பவுண்டு, வேராவல், குஜராத் 362266 கிளை அலுவலகம்: M–7, சாய் சாகர் கட்டிடம், திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை–600032

வளாகத்தைக் காலி செய்வதற்கான அறிவிப்பு

தேதி: 29.12.2025

பெறுநர்,
கலைவாணி, காந்தி சாலை, சூளைமேடு, கஸ்தூரிபாய் தெரு, பிருந்தாவன் காலனி, எண்.16, பேருந்து நிலையம், சென்னை–600094
முரளி M, காந்தி சாலை, சூளைமேடு, கஸ்தூரிபாய் தெரு, பிருந்தாவன் காலனி, எண்.16, பேருந்து நிலையம், சென்னை–600094
கலைவாணி, S.No.216/2, மனை எண்.144, கதவு எண்.3, 3 ஆவது தெரு, பட்டா எண்.817, சக்தி நகர், நெற்குன்றம் கிராமம், ஆர்ஜே மஹால் அருகே, வானகரம், திருவள்ளூர், நெற்குன்றம்–600 095
முரளி M, S.No.216/2, மனை எண்.144, கதவு எண்.3, 3 ஆவது தெரு, பட்டா எண்.817, சக்தி நகர், நெற்குன்றம் கிராமம், ஆர்ஜே மஹால் அருகே, வானகரம், திருவள்ளூர், நெற்குன்றம்–600 095
கலைவாணி, C/o, இம்போர்ட் குவாலிட்டி புராடக்ட், தரைத்தளம், பழைய எண்.24/1, புதிய எண்.31/1, ஆபிசர்ஸ் காலனி, மேத்தா நகர், அமைந்தகரை, சென்னை–600 029.

அன்புள்ள ஐயா/மேடம்,

பொருள்: கடன் கணக்கு எண்: LNCHNPHL–12220153241 மற்றும் LNCHNPHL–12220153242 இன்படி எங்களிடம் வாங்கிய வீட்டுக்கடன் தொடர்பான வழக்கில், சர்வே எண்.216, பட்டா எண்.817, பட்டாவின்படி புதிய S.No.216/2, நெற்குன்றம் கிராமம், அடையாறு துணை பதிவாளர் அலுவலகத்தில் பதிவு எண்.3, சக்தி நகர், 3 ஆவது தெரு, நெற்குன்றம் கிராமம், அம்பத்தூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டம், சென்னை–600094 இல் அமைந்துள்ள 1200 ச.அடி பரப்பளவு உள்ள **அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள** நிலம் மற்றும் கட்டிடம் அடங்கியுள்ள **சொத்தில் உள்ள அசையக் கூடிய பொருள்களை காலி செய்து நீக்குவதற்கான** அறிவிப்பு.

கடன் கணக்கு எண்: LNCHNPHL–12220153241 மற்றும் LNCHNPHL–12220153242 இன்படி ஆதித்யா பிர்லா ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் (இனிமேல் ஏபிஎச்எப்எல் என்று குறிப்பிடப்படும்) பெற்ற கடன் தொகை ரூ.54,72,338/– (ரூபாய் ஐம்பத்து நான்கு லட்சத்து எழுபத்திரண்டாயிரத்து முந்நூற்று முப்பத்தெட்டு மட்டும்) மற்றும் 1,87,613/– (ரூபாய் ஒரு லட்சத்து எண்பத்தேழாயிரத்து அறுநூற்று பதின்மூன்று மட்டும்) மொத்தம் ரூ.56,60,000/– (ரூபாய் ஐம்பத்தாறு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) கடன்வசதியைப் பெறுவதற்காக **சர்வே எண்.216, பட்டா எண்.817, பட்டாவின்படி புதிய S.No.216/2,** நெற்குன்றம் கிராமம், **மனை எண்.144, கதவு எண்.3,** சக்தி நகர், 3 ஆவது தெரு, நெற்குன்றம் கிராமம், அம்பத்தூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டம், சென்னை–600094 இல் அமைந்துள்ள 1200 ச.அடி பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள நிலம் மற்றும் கட்டிடம் அடங்கியுள்ள உள்ள சொத்து அடமானம் வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறிருக்க கீழே கையொப்பமிட்டவர் ஆதித்யா பிர்லா ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்டின் அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால் பத்திரமாமமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9 உடன் பிரிவு 13(2) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி **07.11.2024** தேதியிட்ட மேற்கூறிய கோரிக்கை அறிவிப்பு கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தக் கோரி அழைப்பு விடுத்திருந்தார்.

கடன்தாரர்களாகிய நீங்கள், தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளீர்கள், இதன்மூலம் கடன்தாரர்கள் மற்றும் பொதுவாகப் பொதுமக்களுக்கு வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே கையொப்பமிட்டவர் பிரிவு 14 இன் கீழ் அளிக்கப்பட்ட உத்தரவு CMP No.4268/2025 தேதி 29.04.2025 இன்படி அவருக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இங்கே கீழே விவரிக்கப்பட்ட சொத்தினை 23 அக்டோபர் 2025 தேதியன்று கையக சுவாதீனம் செய்துள்ளார். இந்த தகவலின்படி நீங்கள் 7 நாள்களுக்குள் வளாகத்தை காலி செய்யும்படியும், அடமான சொத்தில் வைக்கப்பட்டிருக்கிற உள்ள உங்களுக்குச் சொந்தமான அனைத்து தனிப்பட்ட பொருள்களையும் நீக்கும்படியும் மேலும் அமைதியான முறையில் காலி சொத்தை அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். குறிப்பிட்ட கால வரம்புக்குள் உங்கள் தனிப்பட்ட பொருள்களை நீக்குவதற்கு நீங்கள் தவறினால் ஏபிஎச்எல் அடமான சொத்தில் உள்ள எந்தவொரு தனிப்பட்ட வகையிலானவற்றை நீக்குவதற்கான உரிமை பெற்றுள்ளது. கூறப்பட்ட தனிப்பட்ட பொருள்களை விற்பதற்கான உரிமை பெற்றிருப்பதோடு, அந்த விற்பனையின் மூலம் கிடைத்தவற்றை முதலில் விற்பனைக்கான செலவு போக மீதமுள்ள தொகையை ஏபிஎச்எல் கடன் புத்தகத்தில் வரவு வைத்து மீதமுள்ள தொகையை உங்களிடம் வசூலிக்கும்.

எனவேநீங்கள் அமைதியான முறையில் காலி சொத்தை அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தேதி: 31.12.2025 — ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி
இடம்: சென்னை — M/s, ஆதித்யா பிர்லா ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்டிற்காக

இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டு விதிக்கப்பட்ட

மீனவர்களுக்கான அபராதத்துக்கு இந்தியா பொறுப்பேற்காது

ஒன்றிய அமைச்சரின் பேச்சால் பரபரப்பு

ராமேஸ்வரம், டிச. 31: இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டு விதிக்கப்படும் மீனவர்களுக்கான அபராதத்துக்கு இந்தியா பொறுப்பேற்காது என்று ஒன்றிய அமைச்சர் தெரிவித்து உள்ளது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

ராமேஸ்வரம் மற்றும் மண்டபம் பகுதியைசேர்ந்த 6 மீனவர்களை இலங்கை கடற்படை அடுத்தடுத்து கைது செய்து உள்ளது, மீனவர்கள் மத்தியில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், ஒன்றிய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சர் எஸ்.பி.சிங் பாகேல் நேற்று முன்தினம் இரவு ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோயிலில் தரிசனம் செய்தார். பின்னர், பாஜகவினர் ஏற்பாடு செய்திருந்த திடீர் மீனவர்கள் சந்திப்பு கூட்டத்தில் கலந்து கொண்டார். இக்கூட்டத்தில் பாம்பன், தங்கச்சிமடம், ராமேஸ்வரம் பகுதியைசேர்ந்த மீனவ மக்கள் கலந்து கொண்டனர். இதில் மீனவ பெண்கள் தங்களின் குறைகள் குறித்து தெரிவித்தனர்.

பின்னர் செய்தியாளருக்கு பேட்டி அளித்த அமைச்சர், "இலங்கை அரசால் சிறைபிடிக்கப்படும் தமிழக மீனவர்களுக்கு அந்நாட்டில் விதிக்கப்படும் அபராதத்திற்கு இந்தியா பொறுப்பேற்காது. இது இந்திய அரசின் குற்றம் கிடையாது. அனைவருக்குமான அபராதத் தொகையை இந்திய அரசு செலுத்தி விட்டால், மீண்டும் மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் செல்லாமல் இருப்பார்களா? அதற்கு அவர்கள் உத்தரவாதம் கொடுக்கமுடியுமா" என கேள்வி எழுப்பினார். ஒன்றிய அமைச்சரின் இந்தப் பேச்சு, மீனவர்களை கடும் அதிர்ச்சியும், அதிருப்தியும் அடைய செய்திருக்கிறது. ஒன்றிய மீன்வளத்துறை அமைச்சரின் பேச்சுக்கு மீனவ சமுதாய மக்கள் கடும் கண்டனத்தையும் தெரித்துள்ளனர்.

தமிழக மீனவர்கள் நலனில் சிறப்பாக கையாண்டு அவர்களை பாதுகாப்பதாக ஒன்றிய அரசு அடிக்கடி கூறி வரும் நிலையில், மீனவர்களின் அபராததுக்கு இந்தியா பொறுப்பேற்காது என ஒன்றிய அமைச்சர் பேசி உள்ளது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

ஏற்காடு காபி தோட்டத்திற்கு வரவழைத்து உல்லாசம்

கள்ளக்காதலியை கொலை செய்து கணவனுக்கு தாலி அனுப்பிய வாலிபர்

● 300 அடி பள்ளத்தில் வீசிய சடலம் மீட்பு ● போலீசில் பரபரப்பு வாக்குமூலம்

சேலம், டிச. 31: ஏற்காடு காபி தோட்டத்திற்கு வரவழைத்து உல்லாசமாக இருந்துவிட்டு, இன்ஸ்டாகிராம் காதலியை கொன்று கணவனுக்கு தாலியை அனுப்பியதாக கைதான கள்ளக்காதலன் போலீசில் பரபரப்பு வாக்குமூலம் அளித்துள்ளார்.

சேலம் மாவட்டம், ஏற்காடு மாரமங்கலம் மலைக்கிராமத்தைசேர்ந்தவர் சண்முகம் (28) லாரி டிரைவர். இவரது மனைவி சுமதி (24). திருமணமாகி 2 ஆண்டுகள் ஆகிறது. குழந்தை இல்லை. கடந்த 23ம் தேதி வீட்டில் இருந்து வெளியே சென்ற சுமதி, திரும்பி வரவில்லை. இதுகுறித்து ஏற்காடு போலீசில் சண்முகம் புகார் அளித்தார். இந்நிலையில், மாரமங்கலம் மலைக்கிராமத்திற்கு வந்தபஸ்டிரைவர், ஒருபார்சலை அங்குள்ள மளிகைக் கடையில் கொடுத்து, சண்முகத்திடம் வழங்குமாறு கூறியுள்ளார். அதன்படி சண்முகத்திடம் ஒப்படைக்கப்பட்ட பார்சலில் சுமதி அணிந்திருந்த தாலி இருந்துள்ளது. உடனே இதனை கொடுத்தனுப்பியது யார்? என அந்த டிரைவரிடம் சண்முகம் விசாரித்தபோது, மாரமங்கலம் மலைக்கிராமத்தைசேர்ந்தகோவிந்தன் மகன் வெங்கடேஷ் (22) என்பவர்கொடுத்து அனுப்பியது தெரியவந்தது.

அவரிடம் சென்று கேட்டபோது, உன்மனைவி சுமதி, இந்த தாலியை கழற்றி கொடுத்துவிட்டு உன்னோடு வாழ முடியாது எனக்கூறி எங்கோ சென்றுவிட்டார். யாருடன் சென்றார்? எனத்தெரியாது எனக்கூறியுள்ளார். இதையடுத்து அவர் மீது சந்தேகம் கொண்டு, போலீசாரிடம் வெங்கடேசை பிடித்து விசாரிக்கும்படி சண்முகம் கூறியுள்ளார். இதன்பேரில், போலீசார் வெங்கடேசை பிடித்து கிடுக்கிப்பிடி விசாரணை நடத்தினர். அதில் அவர், தனக்கும், சுமதிக்கும் இடையேதகாத உறவுஇருந்தது, அவரைகடந்த 23ம்தேதி கொலைசெய்து, சாக்குமூட்டையில் கட்டி ஏற்காடு குப்பனூர் சாலையில் முனியப்பன்கோயிலை அடுத்த வளைவில் இருக்கும் 300 அடி பள்ளத்தில் வீசியதாக தெரிவித்துள்ளார். உடனடியாக போலீசார் சென்று சாக்குமூட்டையில் கட்டி வீசப்பட்டிருந்த சுமதியின் சடலத்தை மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். இதை தொடர்ந்து கைதான வெங்கடேஷ் அளித்தபரபரப்பு வாக்குமூலம் குறித்து போலீசார் கூறியதாவது: மாரமங்கலத்தை சேர்ந்த சுமதி, இன்ஸ்டாகிராம் மூலம் வெங்கடேசுக்கு பழக்கமாகி, பின்னர் நேரில் பார்த்துநெருங்கியுள்ளனர். சண்முகம்லாரிஓட்டிசென்றதும், அந்தபகுதியில்உள்ள தனது அரை ஏக்கர் காபி தோட்டத்திற்கு சுமதியை அடிக்கடி வரவழைத்து வெங்கடேஷ் உல்லாசமாக இருந்து வந்துள்ளார். ஓராண்டாக இது நீடித்த நிலையில், கடந்த ஒரு மாதமாக வெங்கடேசின் போன் அழைப்பை சுமதி தவிர்த்துள்ளார். மேலும் இன்ஸ்டாகிராம், பேஸ்புக் உள்ளிட்ட சமூகவலைதளங்களையும், போனையும் ரகசிய குறியீடுடன் கூடிய லாக் போட்டு வைத்துள்ளார். அதனை அறிந்து, உனக்கு வேறு நபர்களோடு தொடர்பு இருக்கிறதா என சந்தேகத்தில் கேட்டு வெங்கடேஷ் தகராறு செய்துள்ளார். இதுவரையில் இன்ஸ்டா சுமதிக்கு ரூ.1லட்சத்திற்கும் மேல் செலவு செய்துள்ளார். ஆனால் அவர் வேறுநபர்களுடன் போனில் பேசி வந்தது, அவருக்கு ஆத்திரமூட்டியது.

சம்பவத்தன்று (23ம்தேதி) மதியம் சுமதியை காபிதோட்டத்திற்கு வரவழைத்து இருவரும் உல்லாசமாக இருந்துள்ளனர். பின்னர் செல்போனை லாக் விவகாரம் குறித்து இருவருக்கும் தகராறு ஏற்பட்டுள்ளது. ஆத்திரத்தில் துப்பட்டாவால் சுமதியின் கழுத்தை இறுக்கி கொலை செய்து தங்க தாலியை மட்டும் கழற்றி எடுத்துவிட்டு, காபிகொட்டைகட்டும்சாக்குப்பையில் போட்டு கட்டி, பைக்கில் ஏற்றி குப்பனூர் மலைப்பாதையில் 6 கி.மீ. தூரம் சென்று முனியப்பன் கோயில் அருகே வளைவில் உள்ள பள்ளத்தில் இறங்கி, தூரமாகதுக்கிவீசியுள்ளார். பின்னர் தாலியைபார்சலில் அனுப்பி வைத்து, வேறு நபருடன் அவர் ஓடிவிட்டார் எனக்கூறினால் நம்பி விடுவார்கள் என நாடகம் ஆடியுள்ளார். இவ்வாறு போலீசார் தெரிவித்தனர்.

▶ கொலை செய்யப்பட்ட சுமதி. கைதான வெங்கடேஷ்.

▶ 300 அடி பள்ளத்தில் சுமதியின் சடலத்துடன் கிடந்த சாக்குமூட்டை.

ஒரே பெண்ணுக்கு 2 பேர் போட்டி வடமாநில வாலிபர் குத்திக்கொலை

பீகார் மாநிலத்தை சேர்ந்தவர் தீபக்குமார் (26). இவர், திருப்பூர் ராக்கியாபாளையம் அடுத்த வள்ளியம்மை நகரில் தங்கி பனியன் நிறுவனத்தில் வேலை செய்து வந்தார். தீபக்குமார் ஒரு வடமாநில பெண்ணுடன் பேசி பழகி வந்தார். நாளடைவில் அது காதலாக மாறியது. இந்நிலையில், அதே பகுதியில் தங்கி மற்றொரு கம்பெனியில் வேலை பார்த்து வரும் பீகாரை சேர்ந்த விக்ரம்குமார் (27) என்பவரும் அதே பெண்ணை காதலித்து வந்தார். இதனால், தீபக்குமாருக்கும், விக்ரம்குமாருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. இந்நிலையில் நேற்று அதிகாலை இருவரும் சந்தித்து அந்த பெண்ணை காதலிப்பது யார் என்பது குறித்து பேசி உள்ளனர். இதில் ஏற்பட்ட தகராறில் ஆத்திரமடைந்த விக்ரம்குமார் மறைத்து வைத்திருந்த கத்தியால் தீபக்குமாரை சரமாரியாக குத்தினார். இதில், பலத்த காயமடைந்த அவர் சம்பவ இடத்திலேயே பலியானார். இது குறித்து போலீசார் வழக்குப்பதிந்து விக்ரம்குமாரை கைது செய்தனர்.

ஹீரோ ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
HeroHousing Finance
தொடர்பு முகவரி: ஏ-6, மூன்றாவது தளம், செக்டார்-4, நொய்டா-201301.
பதிவு அலுவலகம்: 09, சமுதாய மையம், பசந்த் லோக், வசந்த் விஹார், புதுடெல்லி-110057 தொலைபேசி: 011 49267000, கட்டணமில்லா எண்: 1800 212 8800, மின்னஞ்சல்: customer.care@herohfl.com
இணையதளம்: www.herohousingfinance.com | CIN: U65192DL2016PLC30148

கோரிக்கை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 ("விதிகள்") இன் விதி 3 உடன் பத்திரமாமமாக்கல் மற்றும் சீரிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 ("சட்டம்") இன் பிரிவு 13(2) கீழ்

இவ்வாறிருக்க கீழே கையொப்பமிட்டவர் ஹீரோ ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (எச்எச்எப்எல்) அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால் சட்டத்தின் கீழ் மேலும் விதிகளின் விதி 3 உடன் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி சட்டத்தின் பிரிவு 13(2) கீழ் ஏற்கனவே கீழ்க்காணும் தேதியிட்ட விரிவான கோரிக்கை அறிவிப்புகள் வழங்கி, இதன்கீழ் பட்டியலிடப்பட்ட கடன்தாரர்(கள்)/ உப–கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) (அனைவரும் தனியாக அல்லது கூட்டாக "கடமைதாரர்கள்" ஆக குறிப்பிடப்படுவர்)/ சட்டப்பூர்வ வாரிசு(கள்)/ சட்டப்பூர்வ பிரதிநிதி(கள்) ஆகியோர், கீழே கொடுக்கப்பட்ட விவரங்களின்படி, சம்பந்தப்பட்ட கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிட்டத் தொகைகளை, சம்பந்தப்பட்ட அறிவிப்புத் தேதி/களிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறுக் கோரியிருந்தார். மேற்கூறிய அறிவிப்புகளின் பிரதிகள் ஒப்புகையுடன் கூடியபதிவஞ்சல் A.D. மூல